செ.வெ.எண்:31 நாள்:12.06.2018

**குழந்தைகளை தொழிலாளர்களாக பயன்படுத்துபவர்களுக்கு சட்டப்படி கடும் தண்டனை விதிக்கப்படும் என விழிப்புணர்வு பேரணி, உறுதிமொழி ஏற்பு மற்றும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எச்சரிக்கை.**

கரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை சார்பில் நடைபெற்ற குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினரை பணியில் ஈடுபடுத்துவதை தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் கீழ் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு பேரணி, உறுதிமொழிஏற்பு நிகழ்ச்சி, கையெழுத்து இயக்கம், வாகனங்களில் ஒட்டுவில்லைகளை ஒட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.06.2018) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நாட்டினுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகும் குழந்தைகளுக்கு முறையான கல்வி, உணவுகளை வழங்கி வளர்க்கும் தருணத்தில் அவர்களை பணியில் ஈடுபடுத்துவது, துன்புறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுத்தாமல் தடுக்கவும், இது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்திடவும், ஒவ்வொரு ஆண்டும் ஜீன் திங்கள் 12-ம் நாளை குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு உறுதிமொழி ஏற்பு, துண்டுபிரசுரங்கள் வழங்குதல், கருத்தரங்குகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. குழந்தை தொழிலாளர் தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1986-ன்படி 14 வயதிற்குட்பட்ட எந்த குழந்தைகளையும் எவ்வித பணியில் ஈடுபடுத்துவதும், 15 முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளை முதன்முறை மீறுவோருக்கு ரூ.50,000 அபராதம் அல்லது 2 ஆண்டு சிறை தண்டனையும், 2-ம் முறையாக மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் பாதுகாவலர் அல்லது பெற்றோர்களுக்கும் ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும். வளர வேண்டிய பருவத்தில் குழந்தைகளுக்கு நல்ல வழிமுறைகளை சொல்லித்தந்து கட்டாயக்கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் 14 வயதிற்குட்பட்ட அனைவரையும் கல்வி கற்க செய்து குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக உருவாக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இந்த விழிப்புணர்வு பேரணியில், 1000-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்று குழந்தை தொழிலாளர் எதிர்ப்புக்குரிய வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தி கரூரின் முக்கிய வீதிகள் வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர்.

பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அனைத்து அரசு அலுவலர்கள், பணியாளர்களைக்கொண்டு குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியான "இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி, கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எவ்வித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தைகள் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் எனவும், தமிழகத்தை குழந்தைகள் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமார உறுதி கூறுகிறேன்" என்ற உறுதிமொழியை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வாசிக்க அனைவரும் அதை பின்தொடர்ந்து ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, நகராட்சி ஆணையர் திரு.அசோக்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில், உதவி ஆணையர் (தொழிலாளர்) திரு.உ.ராமராஜ், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு.கணேஷ்மூர்த்தி, வட்டாட்சியர் திரு.கலியமூர்த்தி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**